# മരിയാ മൈ ഡാർലിങ്




அங்கே பார். அதுதான் கேரன்ஸ்டின் கோட்டையாக இருக்க வேண்டும். மிகவும் அழகு. தேவதைக் கதைகளில் வருவது போல...
அதன் உரிமையாளர் பெரும் செல்வந்தராக இருக்க வேண்டும்! அங்கே வசிப்பது யார்? உனக்குத் தெரியுமா?
கேரன்ஸ்டின் பிரபு
இதற்கு முன் இங்கே வந்ததில்லை. நாங்கள் வியன்னாவிலிருந்து வருகிறோம்.
மரியாவும் பிரீடாவும் இரட்டையர்கள். அவர்கள் ஆன்டி கேத்திக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லை
நீ மரியா என்றால் இது பிரீடா? எப்படி வளர்ந்து விட்டீர்கள்?
ஆன்டி கேத்தி நீங்களும் அங்கிள் கஸ்டோவும் இங்கேயே தங்கிவிட எங்களை அழைத்ததற்கு மகிழ்ச்சி!
எங்களால் முடிந்தது அதுதான் அன்பே... உங்கள் பெற்றோர் இறந்துவிட்டனர். வெளியே சென்றுள்ள அங்கிள் கஸ்டோவ் விரைவில் வந்துவிடுவார்!
கஸ்டோவ் அந்த கேரன்ஸ்டைன் கிராமத்தில் மூத்தவர். நல்ல ஒழுக்கங்களை கடுமையாகப் பின்பற்றுபவர்
அங்கிள் கஸ்டோவும் வந்து சேர்ந்தார்
என்ன இது தேவதைகள் போல மெல்லிய உடை? பெற்றோர் இறந்த துக்கத்திலும் இது போன்ற ஆடை தேவையா?
கஸ்டோவ்...
இல்லை அங்கிள், கடந்த இரண்டு மாதங்களாக நாங்கள் கறுப்பு உடையே அணிந்தோம்!
இனி இதுபோன்ற உடைகளை அணியாதீர்கள். கண்ணியமாக ஆடைகளைத் தேர்ந்தெடுத்து உடுத்துங்கள்!
உங்களுக்கு உணவு எடுத்து வருகிறேன் கஸ்டோவ்!
வேண்டாம் பெண்ணே! நான் ஒரு சந்திப்புக்காக வெளியே செல்கிறேன்!
என் நண்பர்களைப் பார்க்க!
வருத்தம் வேண்டாம்! உங்கள் அங்கிள் மிகவும் நல்லவர். இந்த கேரன்ஸ்டின் கிராமத்து மக்களும் மிகவும் நல்லவர்கள்!


கேரன்ஸ்டின் கிராம மக்களுக்கு இது முக்கியமான நேரம். தீமைகளை வேறுக்கும் நிறைய வேலைகளை செய்ய வேண்டியிருந்து
ஆண்டவர் நம்மை அழைக்கிறார் சகோதரர்களே! நம் பகுதியிலுள்ள சாத்தான் வழிபாட்டாளர்களை - சூனியக்காரிகளைப் பிடித்து எரிக்கச் சொல்கிறார்!
ஆமாம். அவர்களை உயிருடன் எரிக்க வேண்டும்!
அதில் ஒருவரை எனக்குத் தெரியும்!
காட்டின் எல்லையில் ஒரு வீடு. அதில் ஒரு இளம்பெண் வசிக்கி--றாள்... தனியாக. மணம் செய்து கொள்ளவும் மறுக்கிறாள்!
அவள் செல்லப்--பிராணி ஒரு தவளை! அவளுக்கு மந்திர சக்திகள் தெரியும் என்று நினைக்கிறேன்!
அப்படியானால் வாருங்கள் உடனே போவோம்!
ஏறுங்கள் குதிரை--யில்!
எரியுங்கள் சூனியக்--காரியை!
பல மணிநேர பயணத்தில் அந்த வீட்டை அடைந்தனர். தீமைகளை கட்டுப்படுத்த விரும்பினர்
அதோ வெளிச்சம்!
வீட்டை நோக்கி முன்னேறுங்கள் சகோதரர்களே!
அவள் தனியே இருக்கிறாள்!
ஆனால் நினைத்தது போல் அவள் தனியாக இல்லை
கஸ்டோவ்? சைத்தானே என்ன வேண்டும் உனக்கு? எரிக்க மேலும் இளம் பெண்கள் தேவையா? இவளை எரிக்க நினைக்காதே இவள் என்னுடையவள்!
கேரன்ஸ்டின் பிரபு?
எல்லோரும் வெளியே செல்லுங்கள்! எனக்கு ஆணையிட கிராமத்து மக்களுக்கு உரிமை கிடையாது. நான் விரும்பியதைச் செய்வேன்!
இந்த தரங்கெட்ட.....
கஸ்டோவ் துப்பாக்கியைத் தூக்கிய மறுகணம் இருவருக்கும் இடையே ஒரு கறுத்த பெரிய உருவம் அச்சுருத்துவது போல் தோன்றியது
என் எஜமானரை சுடாதே!
முட்டாள்தனம். அவன் பேசட்டும் விடு! ஜோசிம் அவனைத் தூக்கில் போட்டால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் என்று நினைத்துப் பார்க்கட்டும். அது எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்!
நீ ஒரு சாத்தான் கேரன்ஸ்டின் பிரபு! நீ ஒரு சாத்தான்!
எனக்காகவும் கொஞ்சம் பிரார்த்தனை செய் கஸ்டோவ்!
கேரன்ஸ்டைன் பிரபுவின் பாவங்களுக்காக ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்கவும், கஸ்டோவ் நிலை தர்மசங்கடமானது.
சிற்றின்பங்களுக்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்து விட்டார்...
கஸ்டோவ், கேரன்ஸ்டைன் பிரபுவைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர்


அது அதிகார துஷ்பிரயோகம். அவர் அளிக்கும் விருந்துகள் சபிக்கப்பட்டவை. பாவ மனிதர்கள் சாத்தான்கள்....
அவர்கள் பகன் சடங்குகளில் ஈடுபடுகிறார்கள். சாத்தானை வழிபடுகின்றனர். பிரபு அவர்களை அழிப்பார் அல்லது அவரது பணியாள் அழிப்பான்!
பிரீடா என்ன செய்து கொண்டி- -ருந்தாய்?
பாவங்களின் பட்டியலை கேட்டுக் கொண்டிருந்தேன் மரியா. பிரபு கேரன்ஸ்டைனைச் சந்திக்க விரும்புகிறேன்!
அந்த முக்கிய தருணத்தில் கேரன்ஸ்டைன் பிரபு ஒரு கேளிக்கையில் மகிழ்வாக இருந்தார்.
இந்த ஏற்பாடுகள் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்றே நினைக்கிறேன் பிரபு?
இல்லை. அது மோசம். அது நம் இருவருக்கும் தெரியும் டிட்ரிச்!
ஆஹ்ஹ்!!
இவ்வளவுதான் உங்களால் செய்ய முடியுமா முட்டாள்களே! வெளியே போங்கள்!
...ஆனால் அந்தப் பெண் இருக்கட்டும்!
நிச்சயமாக பிரபு! அப்படியே ஆகட்டும்!
அவர்கள் என் முன்னோர்கள் அறிவார்கள். தீய சக்தியாக அவர்கள் நடிக்கவில்லை. கல்லறையைத தாண்டிய மகிழ்ச்சிகளை சாத்தான் அவர்களுக்கு கற்பித்துள்ளது!
இருளின் அரசனே! இந்த உலகின் பரிதாபமான சுகங்களால் சோர்வடைந்து விட்டேன். உங்கள் தீமைப் பணியை நான் செய்ய எனக்கு சக்தி கொடுங்கள். என் விஸ்வாசத்தைக் காட்டும் அடையாளமாக... நான் அர்ப்பணிப்பது...
இந்தப் பெண்ணை...
உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன் பிரபு! என்னை விட்டு விடுங்கள்! தவறாக நான் எதுவும் செய்யவில்லை!
ஆஆஆஆஹ்!!


இறந்த பெண்ணின் அருகிலிருந்த கேரன்ஸ்டைன் தான் மட்டும் தனியாக இருக்கவில்லை என்பதை உணர்ந்தார்
என்ன...? யார் நீ? எங்கிருந்து வந்தாய்? பேசு....
இருளின் அரசனிடம் நீ செய்த பிரார்த்தனைகளுக்குப் பதிலளிக்கவே நான் வந்தேன். நான் மிர்காலா!...
மிர்காலா கேரன்ஸ்டைன்! நீதான் இறந்து ஒரு நூறாண்டு ஆகிறதே!
நான் இறந்தும் இறக்காதவள். ரத்தக் காட்டேரி... இப்போது....
நீயும் எங்களில் ஒருவன் ஆகப் போகிறாய்!
ஆஹ்ஹ்!
சில விநாடிகளில்.... தன் நாளங்களில் புதிய உற்சாகம் பரவுவதை உணர்ந்தார் கேரன்ஸ்டின்
கண்ணாடியில் என் பிம்பம் கரைகிறது... நானும் ஒரு ரத்தக் காட்டேரி!!



விரைவில் கேரன்ஸ்டைன் கோட்டையில் தங்குவது இரட்டை சகோதரிகளுக்குப் பிடித்துவிட்டது. விரைவில் பிரீடா அமைதியற்று இருப்பதை கிராமத்து பள்ளி பாடகர் ஆன்டனி உணர்ந்தார்.
நீ இங்கே மகிழ்ச்சியாக இல்லை என்று நினைக்கிறேன் பிரீடா! உன் அங்கிள் கஸ்டோவ் தவறாக வழிநடத்தப்பட்டு இருக்கலாம். ஆனாலும் அவர் மிக நல்ல மனிதர்
ஒருவேளை எனக்கு நல்ல மனிதர்களைப் பிடிக்காது போலும்!
என் விருப்பங்களும் வேறு பக்கம் திரும்பிவிட்டது என்று நினைக்கிறேன்!
விரைவில் பிரீடா கேரன்ஸ்டைன் பிரபுவுக்கு அறிமுகம் ஆனது அவள் அங்கிள் கஸ்டோவுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை
பிரீடா, பள்ளிக்குத் திரும்பிச் செல்!
மிகவும் அவமரியாதை செய்கிறீர்கள் கஸ்டாவ்! உங்கள் மருமகள் என்னோடு பேசிக்கொண்டு தான் இருந்தாள்!
நீங்கள் வயதில் மூத்தவராக இருக்கலாம். ஆனால் இந்த மாளிகை உரிமையாளன் நானே!
இனி அவள் உன்னோடு பேசமாட்டாள்!
ஆனால் பிரீடாவிடம் வேறு திட்டம் இருந்தது


ஜோசிம் - எல்லோரும் அமைதியாக இருக்கிறார்கள். டிட்ரிச், இன்கிரிட் இருவரும் என்னைச் சோர்வடையச் செய்கிறீர்கள்!
நான் போவது உங்களுக்கு மகிழ்ச்சி என்றால் நான் போகிறேன் பிரபு!
இங்கேயே இரு. இன்கிரிட், துடுக்காகப் பேசும் உனக்கு ஒரு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும்!
சரியாகச் சொன்னீர்கள் பிரபு, அது அவசியம்தான்!
நாம் இருவரும் சேர்ந்து அவளைத் தண்டிப்போம். ஜோசிம் அவளை என் அறைக்கு இழுத்துச் செல்!
வேண்டாம் பிரபு! நான் தவறாக எதுவும் பேசவில்-லையே!
உனக்கும் இது தெரியவேண்டும் பிரீடா. கண்ணாடியில் பார்! என்ன தெரிகிறது?
ஏன்... எதுவுமில்லை! நான் மட்டுமே தெரிகிறேன்! நீங்கள் ஏன் அதில் தெரியவில்லை?
பிரீடா, நான் இறந்தும் இறவாதவன் - அழிவில்லாதவன். சாத்தானின் விருப்பங்களை நிறைவேற்றுபவன்... மனித ரத்தம்... உன்னால் முடியும்!
இல்லை. நீ ஒரு ரத்தக்காட்டேரி!
ஆஆஆஆஹ்!!
ஒரு சுகமான வலி பிரீடாவை வசீகரித்தது. நாடித்துடிப்பு அதிகரித்தது. ரத்தம் வேண்டும் என்று தாகம் தவிர்க்க முடியாதது என்றானது
பிரீடா, அவளை எடுத்துக்-கொள்!
சரி!
கடவுளே! என்னைக் காப்பாற்று!
அவளை யாரும் காப்பாற்ற முடியாது பிரீடா. காட்டேரியின் முத்தத்தால் அவள் இறப்பாள். ஆனால் நீ வாழ்வாய்!
ஆஆஆஆஹ்!!


சிறிது காலத்துக்குப் பின் டிட்ரிச் இரவில் கோட்டைக்கு வெளியே மதுவின் மயக்கத்தால் தடுமாறி விழுந்தான். மிகவும் பயந்திருந்தான். இதற்கு முன் அவனது எஜமானரான கேரன்ஸ்டைன் பிரபுவின் நடவடிக்கை விசித்திரமாக இருந்ததில்லை.
ஆனால் டிட்ரிச்சின் மரணம் கேரன்ஸ்டைன் பிரபுவின் கையில் என்று விதிக்கப்படவில்லை
அடக்- -கடவுளே!
ஆஆஆஆஆஹ்!!
ஆஹ்.. இப்போது பரவாயில்லை. இங்கிருந்து போய்விட வேண்டும் கேரன்ஸ்டைன் பிரபு... மிகவும் மாறிவிட்டார். என்னைக் கொல்ல நினைக்கிறார்
கேரன்ஸ்டைன் கிராமத்தில் காட்டேரியின் நிழல் போர்வையாக மூடியது. எவருக்கும் பாதுகாப்பில்லை. அந்த மரணங்களால் ஆசிரியர் ஆன்டனிக்கு சந்தேகம் எழுந்தது.
காட்டேரிகளை நம்பமாட்டேன் என்கிறாயே ஆன்டனி, உன்னைச் சுற்றி தடயங்கள் உள்ளது. இரத்தம் உறிஞ்சப்பட்ட உடல்கள், உயிரிழந்த உனக்குத் தெரிந்தவர்களை கொஞ்சம் நினைத்துப்பார்!
நீங்கள் சொல்வதும் சரிதான்!
சரியா? நான் சொல்வதுதான் உண்மை! சாத்தானை ஒழித்தே ஆக வேண்டும். இது கடவுளின் விருப்பம். காட்டேரியைக் கண்டுபிடித்து புனித நெருப்பால் அதை அழிக்க வேண்டும்!
நீங்கள் ஒரு வெறியர் கஸ்டாவ்! அதன் இதயத்தை ஒரு ஈட்டியால் துளைத்தால் கதை முடிந்தது. நெருப்பு உபயோகமற்றது!
அப்படி ஒருவேளை அவை இருந்தால்...
விரைவில் உணர்ந்து கொள்வாய் அவை இருக்கிறதென்று
விரைவில் ஆன்டனியின் சந்தேகம் நிரூபணமாகியது.
கஸ்டாவ்? என்ன இது?
இது உன் சகோதரி ஆன்டனி. அவள் கழுத்திலுள்ள அடையாளத்தைப் பார்!
கடவுளே! இது இன்கிரிட்!
அதிர்ஷ்டவசமாக இவள் தூய இதயம் படைத்தவள். அதனால் காட்டேரி கடித்ததால் இறந்துவிட்டாள். தீய எண்ணம் கொண்டவரே காட்டேரியாக உலவுவர்


அன்றிரவு பிரார்த்தனையில் ஸ்தோத்திரங்கள் வாசிக்கப்பட்டன. ஆனால் கிராம மக்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இல்லை
ஹெர்மன் எங்கே? இன்னும் வரவில்லையா? உனக்கு தெரியுமா பிரான்க்?
தெரியாது? இந்நேரம் அவன் இங்கே வந்திருக்க வேண்டுமே?
ஹெர்மன் குதிரைக்கு காலில் அடிபட்டதால் காட்டை நடந்தே கடந்தான். இருள் சூழ்ந்த கானகம் விநோதமான ஒலிகள்....
சீக்கிரம் வா... தூரம் அதிக- -மில்லை...
இருண்ட மரங்களுக்கு நடுவே தோன்றிய தெரிந்த முகம்கூட மிகவும் பயமுறுத்தியது.
என்னை மிகவும் பயமுறுத்தி விட்டாய் குழந்தை. இரவில் இப்படி வெளியே வரக்கூடாது!
உன் அங்கிள் உன் மேல் கோபப்படக்கூடும் மரியா... இல்லை நீ பிரீடாவா?
கண்டு- -பிடியுங்கள்?
யோசிக்க ஹெர்மனுக்கு நேரமேயில்லை அல்லது நேரமே தரப்படவில்லை


ஆஆஆஹ்!
பரீடா!
ஓஹ்!
அங்கிள் என்னைக் காப்பாற்றுங்கள். இது மிகவும் கொடூரம். காட்டேரிகளால் நாங்கள் தாக்கப்பட்டோம்... நான் மட்டுமே தப்பினேன்...
நீ சாத்தானின் புதல்வி! மொத்த பொய்களின் பிறப்பிடம்!
உன் உதட்டின் ஓரம் இன்னும் இரத்தம் வழிகிறது!
ஆஆ... இல்லை!
ஆண்டவரே, எனக்கு உதவுங்கள். இவள் சாத்தானால் அனுப்பப்பட்டவள்!



தனது சகோதரி பிரீடா ஒரு காட்டேரியாக மாறியதை அறிந்து அதிர்ச்சியடைந்த மரியாவைத் தூங்க வைக்க சக்தி வாய்ந்த மருந்து கொடுக்கப்பட்டது
ஆனால் எதுவும் அவளைக் கேரன்ஸ்டைனிடமிருந்து காப்பாற்றப் போவதில்லை
ஆனால் அதை புனித சிலுவை செய்யும்
பிரீடா.. பிரீடா...
மரியா எப்போதும் உறங்கும் போதும் சிலுவை அணிந்திருப்பாள் என்றா சொல்கிறாய்? ஆண்டவருக்கு நன்றி! அப்படியானால் அவள் காட்டேரி ஆக மாட்டாள்!
ஆமாம் கஸ்டாவ். ஆனால் மற்றவள்....
....பிரீடாவின் கதி. அவளை என்ன செய்யப் போகிறீர்கள்?
இல்லை கேத்தி. அதை கிராமத்தினர் தான் முடிவு செய்ய வேண்டும்!


குற்றவாளி!
குற்றவாளி!
நிச்சயம் அவள் குற்றவாளிதான். நம் தோழனின் கழுத்தில் கடித்து ரத்தம் குடித்ததைப் பார்த்தோம். அவளை எரிக்க வேண்டும்!
எரியுங்--கள் அவளை!
சூனியக்காரியின் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சுங்கள்!
நாம் இதை செய்தே ஆக வேண்டும். உடனே!
பிரீடா எப்படி ரத்தக்காட்டேரியாக மாறினாள் என்பதை கிராமத்தினரால் யூகிக்க முடியவில்லை. யார் இதைச் செய்தது?... அதை ஒரு பெண் கண்டுபிடிக்கும் வரை
வேண்டாம்... பிரீடா... போகாதே... கேரன்ஸ்டைன் பிரபு மிகவும் மோசமானவர், தீயவர்....
கேரன்ஸ்டைனா!
உன்னைப் பிடித்துவிட்டேன் பெண்ணே! உன் போன்ற புத்திசாலி பொம்மைகள் கேரன்ஸ்டைனுக்கு இணையாகி விடாது!
நீங்கள் வருவீர்கள் என்று தெரியும் பிரபு. ஆனால் மரியாவை ஏன் தூக்கி வந்தீர்கள்?
கிராமத்தினரைப் பொறுத்தவரை இவளை நீ என்று நினைத்து எரிக்க வேண்டும். பிறகு நீ எனக்குச் சொந்தமாகி விடுவாய் அன்பே!


சீக்கிரம். அவர்கள் வந்து விடுவார்கள். இந்த மனிதன் விழித்து விடுவான். அவனை நான் வசியம் செய்துள்ளேன். விழித்தாலும் எதுவும் அவன் நினைவில் இருக்காது!
அவளை வெளியே இழுந்து வாருங்கள்!
அந்தக் காட்டேரியைக் கொளுத்துங்கள்!
கேரன்ஸ்டைனின் திட்டம் வசியம் செய்யப்பட்ட ஆன்டனி, மரியாவின் நினைவில் பிரீடாவை நெருங்கும்போது அவன் அறிவு வேலை செய்யாது என்று....
மரியா... மரியா....
ஆன்டனி
பயப்படாதே பெண்ணே. உன் பிரார்த்தனைகள் எல்லாம் முடிந்துவிட்டது. இனி நான் உன்னைப் பார்த்துக் கொள்வேன் மரியா!
பிடியுங்கள் அவளை!
கம்பத்தில் கட்டிப் போடுங்கள்!
என்ன நடக்கிறது? நான் எங்கே இருக்கிறேன்?
இது உண்மை--யல்ல!
இல்லை ஆன்டனி! நான் மரியா இல்லை, பிரீடா!
என்னை நம்புங்கள். நான் பிரீடா இல்லை. மரியா!...
இவள் பொய் சொல்கிறாள். கம்பத்தில் கட்டுங்கள்!
எரியுங்கள் அவளை!



தடுமாறி படுக்கையில் விழுந்த ஆன்டனி கையில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது.
சிலுவை... சூனியக்காரியே, போ பின்னால்...
ஆ! ஐயோ!,,,
ய்ய்யாஹ்...
புயலைப் போல ஆன்டனி காட்டை நோக்கி விரைந்தான்
என்ன?
முட்டாள்களா, நிறுத்துங்கள்! தவறான பெண்ணைப் பிடித்து வந்துள்ளீர்கள். உங்கள் மூளை அழுகி விட்டதா?
அங்கே வந்த கேத்தியும் அதை உறுதிப்படுத்தினாள்
ஓ... ஆன்டனி. நன்றி! ஆண்டவனுக்கு நன்றி!
இது மரியா... பிரீடா அல்ல. எப்படியோ இருவரையும் இடம் மாற்றியுள்ளான்!
ஆமாம், செய்தது யார் என்றும் எனக்குத் தெரியும். அது கேரன்ஸ்டைன் பிரபு!
என்ன? கேரன்ஸ்டைனா?
ஓ.. இது கேரன்ஸ்டைன் வேலையா? இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள் மக்களே! இளம் பெண்ணை சூனியக்காரி என்று எரிக்க நினைத்த நீங்கள் கிராமத்து பிரபுவை அழிக்க முடியுமா?
அந்த நாயை எரியூட்டுங்கள்!
அந்தப் பிசாசைக் கம்பத்தில் கட்டுங்கள்!
எரிப்பதால் எந்த பலனும் இல்லை. நெருப்பு அவைகளை ஒழிக்காது. ஆனால் வேறு ஒரு வழியில் முற்றிலும் அழிக்க முடியும்!
சொல்லுங்கள்! சொல்லுங்கள்!
அவர்கள் வரட்டும்!


பிரீடா, என் அன்பே! அவர்கள் நம்மை எரிக்கலாம். அதனால் என்ன? நெருப்பு நம் உடல்களைத் தீண்டும். ஆனால் வலி இருக்காது. நாம் மேலும் புதிய உடல்களை - புதிய பலிகளைத் தேடுவோம்!
அதே சமயத்தில்...
எஜமான், கிராமத்தினர் திரண்டு வருகின்றனர். ஆனால் கையில் ஈட்டியும் கோடரியும் வைத்துள்ளனர்!
ஆஆஆஹ்!
என்ன? இது அந்த ஆன்டனியின் வேலை. அவன் நாசமாய்ப் போக! நாம் சுரங்க வழியாக தப்பித்து விடலாம்!
ஜோசிம்!!
இவன் கேரன்ஸ்டைனின் அடிமை!
கொல் அவனை! இருண்ட இதயத்தை ஈட்டியால் துளை!
ஆஆஆஆஹ்!!
அவர்கள் ஜோசிம்மை கொன்றுவிட்டனர். தப்பிக்க மாடியை நோக்கி ஓடு!
பிரபு நீங்கள் வரவில்லையா?
வருகிறேன் பெண்ணே! முதலில் நீ போ...


இவளது உடலை தேவாலயத்துக்குக் கொண்டு செல்லுங்கள்!
அவன் மறைந்து விட்டான். இது ஒரு ரகசிய அறை. அவன் எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம்!
கோட்டைக்குத் திரும்புங்கள்!
பல ரகசிய வழிகள் கொண்ட கோட்டை என்று கிராமத்தவர் நினைத்தனர். கேரன்ஸ்டைன் மறைந்து நின்றான். அதை மரியா அறியவில்லை.
பிரீடா, எங்கே இருக்கிறாய்? இங்கேயா...?
அவள் இல்லை அன்பே! நான்தான்....
மரியாவைத் தேடிக்கொண்டிருந்த ஆன்டனிக்கு அந்த அபயக் குரல் கேட்டது
கடவுளே! கேரன்ஸ்டைன் மரியாவைப் பிடித்து விட்டான்!
அவளைக் காப்பாற்ற நினைத்த ஆன்டனி துரத்திக்கொண்டு ஓடினான். ஆனால் கேரன்ஸ்டைன் பிரபு முந்திக் கொண்டான்.
முட்டாள்களா, இப்போது என்ன செய்ய முடியும்?
அதோ அவள் கேரன்ஸ்டைன் பிடியில். ஆனால் எப்படி மேலே செல்வது?
எல்லோரும் திகைத்து நின்ற நேரத்தில் அவளைக் காப்பாற்ற ஆன்டனி தயாரானான்.
நான் அவனை வீழ்த்துகிறேன்!
வேண்டாம், பொறு! மரியா அருகிலிருக்கிறாள். தவறுதலாக அவள் மீது ஈட்டி பாயலாம்!
நாயே.. இந்த நேரத்திற்காகத்தான் நீண்ட நாட்களாகக் காத்திருந்தேன்!
கஸ்டாவ்!!
அஹ்!
தவறிவிட்டது முட்டாளே!


ஓடாதே, நில்!
வேண்-டாம்!
ஆன்டனி, ஈட்டியை வீசு!!
ஆன்டனி ஐ லவ் யூ!
வா, என் அன்பே! எல்லாம் முடிந்து விட்டது. தீமை அழிந்து விட்டது!
முற்றும்

# FAN MADE NOT FOR SALE

தமிழாக்கம்
திரு. K V கணேஷ்
கதைதேர்வு & வசன உதவி
திரு. வீரபாண்டியன்
வடிவமைப்பு
பிரசன்னா ஸ்ரீதர்

